**உள்ளுறை உவமம்**

ஒரு கருத்தினை விளக்குவதற்கு இரண்டு வகைகளைக் கையாளுவர். நேராக கருத்தினை கூறுவது ஒருவகை. உவமை மூலம் கருத்தினை விளக்கிக் கூறுவது மற்றொரு வகை.

- அவளுடைய முகம் அழகாக இருக்கின்றது – **நேராக கூறுவது**
- அவளுடைய முகம் நிலவு போல் அழகாக இருக்கின்றது - **உவமையின் மூலம் எடுத்துக் கூறுவது.**

வினை, பயன், வடிவு, வண்ணம் என நான்கு வகைகளால் உவமையை பயன்படுத்துவர்.

- புலி போல பாய்ந்தான் - வினை
- துடிப்போலும் இடை – வடிவு
- மாரியன்ன வண்கை – பயன்
- தளிர் போல மேனி – வண்ணம்

வினை, பயன், வடிவு, வண்ணம் இவற்றால் இவ்உவமை வெளிப்படையாக தெரிகின்றது. உவமை என தானாக உணர முடிகின்றது. இவ்வமைகளில் உவமானமும் இருக்கின்றது. உவமேயமும் இருக்கின்றது.

இந்த நான்கு வகை உவமைகளில் அடங்காது, உய்த்துணரும் வகையில் மறைந்து நின்று பொருளைத் தருகின்ற ஒர் உவமை இருக்கின்றது, அது உள்ளுறை உவமை ஆகும்.

**எடுத்துக்காட்டு ; அகநானுாறு**

ஈயல் புற்றத்து ஈரம்புறத்து இறுத்த

குறும்பி வல்சிப் பெருங்கை ஏற்றை

துாங்குதோல் துதிய வள்ளுகிர் கதுவலின்

பாம்புமதன் அழியும் பானாட் கங்குல்.

பெருங்குன்றுார்க்கிழார்.

**பொருள்**

தலைவன் பிறர் அறியாமல் தலைவியை சந்திக்க இரவு நேரத்தில் வருகிறான். அவ்வேளையில் பசியுடன் அலையும் கரடி ஒன்று ஈசல்கள் நிறைந்த புற்றில் கையை விட்டு பார்க்கிறது. அந்த ஈசல் புற்றில், சுருண்டு படுத்திருந்த பாம்பினை கரடி அறியவில்லை. கரடியின் நகங்கள் பட்டு பாம்பு, வலியால் துடிக்கிறது.

உள்ளே உறைந்துள்ள செய்தி இரவு நேரத்தில் காட்டை கடந்து வரும் தலைவன் செயலால் தலைவி அஞ்சி வருந்துவதை இப்பாடல் தெரிவிக்கிறது. கரடி தலைவனுக்கும், பாம்பு தலைவிக்கும் குறியீடுகளை அமைந்து உள்ளுறை உவமம் உருவாகிறது. இப்பாடலில் உள்ளுறை உவமத்துடன் இறைச்சிப் பொருளும் அமைந்துள்ளது.

**எடுத்துக்காட்டு**

வேறு பன்னாட்டிற்கு கால்தர வந்த

பலவுறு பண்ணியம் இழிதரு நிலவு மணல்

நெடுஞ்சினைப் புன்னைக் கடுஞ்சூல்

வெண்குருகு

உளவுத்திரை யோதம் வெரூஉம்

உரவுநீர்ச் சேர்ப்பனோடு மணவா ஊங்கே.

– **(நற்றிணை 31)**

ஒரு தலைவனும் ஒரு தலைவியும் காதலிக்கின்றனர். தலைவன் கடற்கரையை சார்ந்தவன். கடல் வெண்மணல் பரப்பில் பல நாடுகளிலிருந்தும் பல வகையான பண்டங்கள் வந்து குவிந்துள்ளன. கடற்கரையில் நீண்ட புன்னை மரங்கள் உள்ளன. புன்னை மர கிளைகளில் சூல் கொண்ட வெண்ணிற குருகுகள் உட்கார்ந்து கொண்டிருக்கின்றன. கடல் அலைகள் பெருத்த ஓசையோடு கரையை மோதுகின்றன. இக்கடல் அலைகளின் ஓசை கேட்டு குருகுகள் அஞ்சுகின்றன. இது செய்தி.

குருகுகள் கடலோசைக்கு அஞ்சும் என்பது காதலை மேற்கொண்ட தலைவி அன்னையின் கடுஞ்சொல் கேட்கும் தோறும் அஞ்சுவள் என்பதாம், இது பெறப்பட்ட செய்தி.



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

# உள்ளுறை உவமம்

அகப்பொருள் ஒழுகலாற்றில் சொல்லால் வெளியீட்டு கூறியதற்குரியவல்லாத எண்ணங்களை நாகரீகமாக மறைத்து கூறுதல் பொருட்டு அமைத்துக் கொண்ட உரையாடல் முறையே உள்ளுறை உவமமாகும்.பிறிது மொழிதல் அணி அல்லது ஒட்டணி உள்ளுறை உவமத்தை போன்று இருக்கும்.

**உள்ளுறை**

வினை, பயன் போன்ற அடிப்படைகளில் தோன்றும். குறியீடுகளைக் கொண்டு உருவாக்கப்படும். கவிஞர் தெரியாத பொருள் ஒன்றை தெளிவாக விளக்குவதற்கு தெரிந்த பொருளை உவமையாக பயன்படுத்துவர். வெளிப்படையாக பொருள் கூறினால் உவமை, மற்றொரு பொருளை குறிப்பாக உணர்த்தினால் உள்ளுறை உவமை. குறிப்புகளுக்குள் மேலும் ஒரு குறிப்பு அமைந்திருக்குமானால் அது இறைச்சியாகும். உள்ளுறை உவமம் கவிதை பொருளோடு சேர்ந்து காணப்படுகிறது. இறைச்சிப் பொருள் கவிதைப் பொருளின் புறத்தே குறிப்புப் பொருளாய் வெளிப்படுகிறது.

**இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள்**

உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிக என

உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம். – (**பொருளதிகாரம், அகத்திணை இயல் 48**)

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலமெனக் கொள்ளும்

என்ப குறி அறிந் தோரே. – (**பொருளதிகாரம், அகத்திணை இயல் 47**)

ஏனை உவமம் தானுணர் வகைத்தே.

-

(**பொருளதிகாரம் அகத்திணை இயல் 49**)

**உள்ளுறை உவமம்** ; அகப்பொருள் பாட்டுக்களில் வரும் கருப்பொருட்களை வைத்து வரும்.

**பிறிது மொழிதல்** ; புற பாடல்களில் வரும் எல்லா பொருட்களிலும் வரும்.

**உள்ளுறையின் வகைகள்**

உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு. என ஐந்து வகைப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | உடனுறை | நிலத்து உடனுறையுங் கருப்பொருளாற் பிறிதொன்று பயப்பது. |
| 2. | உவமம் | கருப்பொருளை வைத்து உவமையாக சொல்ல உவமிக்கப்படும் பொருளாகிய வேறு ஒன்று தோன்றுவது. |
| 3. | சுட்டு | ஒன்றனை நினைத்து சுற்றிச் சொல்லும் போது வேறொரு பொருள் தோன்றுவது. |
| 4. | நகை | நகையினால் வேறொரு பொருள் தோன்றுமாறு கூறுதல். |
| 5. | சிறப்பு | **இதற்கு சிறந்தது இஃது** எனக் கூறுவதால் பிறிதொரு பொருள் கொள்ளுமாறு வருதல். |

www.tnpscgroup4.in



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in